# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1915/10 - 2015 මැයි මස 18 වැනි සඳුදා - 2015.05.18

*1915/10 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆவது உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2015, மே 18.*

1. *2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09 ஆந் திகதிய 1627/2 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளைகள் தொடர்ந்தும் இத்தால் திருத்தப்படுகின்றது.*

2. *ஏற்றுமதிக்காகத் தயாரிப்பதற்கு தற்காலிக பொருட்களை இறக்குமதி செய்யும் முன்மொழிவுத் திட்டத்தின்* (Temporary Importation for Export Processing Scheme - TIEP ) *கீழ் இறக்குமதி செய்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற பின்வரும் விடயங்கள் 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 1627/2 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பகுதி* III *இல் அட்டவணை* (IV) *இன் மூலம் ஏற்றுமதி அனுமதிப்பத்திரக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்படுகின்றது.*

*அட்டவணை* IV

| | நிரல் I<br>எச். எஸ்.<br>தலைப்பு | நிரல் II<br>எச். எஸ்.<br>குறியீடு | நிரல் III<br>விபரம் | ICL |
|---|---|---|---|---|
| | 08.02 | 0802.80 | பாக்கு விதை | |
| | | 0802.80.10 | புதிய பாக்கு (கோது நீக்காதவை அல்லது கோது நீக்கப்பட்டவை) | L |
| | | 0802.80.90 | பிற | L |

3. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் சம்பந்தமான 1518/4 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2007.10.08 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் சொல்லப்பட்டவைத் இத்தால் தொடர்ந்தும் திருத்தப்படுகின்றது.

| | எச். எஸ்.<br>குறியீடு | விபரம் | அனுமதிப்பத்திரக்<br>கட்டணம்<br>ரூபா |
|---|---|---|---|
| | 08.02 | பாக்கு விதை | |
| | 0802.80.10 | புதிய பாக்கு (கோது நீக்காதவை அல்லது கோது நீக்கப்பட்டவை) | கி. கி. ஒன்றுக்கு ரூபா 27.00 |
| | 0802.80.90 | பிற | கி. கி. ஒன்றுக்கு ரூபா 27.00 |

4. இந்தத் திருத்தம் 2015, மே மாதம் 20 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும்.

5. 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1912/31 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை இத்தால் தொடர்ந்தும் திருத்தப்படுகின்றது.

6- 153

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.